# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

**தேதி: 01.04.2026**

**OS.No. 92/2023**

**வழக்கு சாட்சி DW.1– ராஜகோபால், த/பெ. அழகர்சாமி**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தாவா சொத்தை நான் 27.05.1998ல் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். கிரையம் வாங்கிய பிறகு நான் ஒரு அறை மட்டும் எனது இடத்தில் எழுப்பினேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய சொத்தில் " மதராஸ் லாகட வீடு 366 சதுரடி, தகர சாப்பு, கோப்பு வீடில் 750 சதுரடி " என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 750 சதுரடி நிலத்தில் உள்ள வீடு காண்கீரிட் கட்டிட வீடு என்றால் சரிதான். 366 சதுரடி தகர சாப்பு வீடு மாடியில் உள்ள அமைப்பு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் மாடி, இரண்டாவது மாடி, மூன்றாவது மாடி இல்லை என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி கிரையம் வாங்கிய சொத்தில் பாதியை சந்திரசேகருக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் கிரையம் கொடுத்துள்ளேன், ஆனால் பாதி அளவுள்ள சொத்து கிரையம் கொடுக்கவில்லை, 10 x 8 என்ற அளவு கொணட் அறைக்கு அடுத்தாற்போல் உள்ள நிலத்தைதான் சந்திரசேகருக்கு கிரையம் கொடுத்தேன்.

நான் கிரையம் வாங்கிய சொத்தில் பாதியை சந்திரசேகருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகர கட்டிட

அமைப்பையும் சேர்த்துதான் சந்திரசேகருக்கு கொடுக்கப்பட்ட கிரையத்தில் நான் மாற்றாக்கம் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. சந்திரசேகருக்கு, நான் கிரையம் மூலம் மாற்றாக்கம் செய்த அளவு கொண்ட சொத்தைதான் வாதி, சந்திரசேகரிடம் இருந்து வாங்கியுள்ளார் என்றால் சரிதான். சந்திரசேகருக்கு கிரையம் கொடுத்த வீட்டை தான் வாதி வாங்கி வாடகைக்கு விட்டுள்ளார் என்றால் சரிதான். சந்திரசேகர் வாங்கிய நிலத்தின் வழியாகத்தான் மாடியில் உள்ள மேற்சொன்ன தகர செட் அமைப்பிற்கு செல்ல வழி உள்ளது என்றால் சரிதான். என் வீட்டு வழியாக மாடியில் உள்ள தகர செட் அமைப்பிற்கு செல்லமுடியாது என்றால் சரிதான். வாதி கிரையம் பெற்றுள்ள வீட்டில் அமைந்துள்ள படிக்கட்டை நான் பயன்படுத்த முயற்சித்தால் அது தவறு என்றால் சரியல்ல, அந்த தகர செட்டிற்கு அந்த வழியாகத்தான் சென்று வருகிறேன். சந்திரசேகருடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஆவணத்தில் சந்திரசேகரனின் கிரைய சொத்தில் உள்ள படி அமைப்பை நான் பயன்படுத்திக்கொள்ள உரிமை குறிப்பிட்டு சங்கதி எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்கு படிக்கத்தெரியாது, அதனால் அதுகுறித்த விபரம் எனக்குத் தெரியாது.

ஒருமுறை கிரையம் கொடுத்துவிட்டால் அது கிரையம் கொடுத்தவரின் உரிமை அற்றுபோய்விடும் என்றாலும், அதன்பிறகு நான் கிரையம் கொடுத்த சொத்தில் எந்தவித உரிமையும் கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. மாடியில் உள்ள தகர அமைப்பு சந்திரசேகருக்கு கிரையம் பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அதுகுறித்த விபரம் சந்திரசேகருக்கு நான் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், வாதியின் சொத்தில் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. சந்திரசேகருக்கு நான் கிரையம் முடித்துக்கொடுத்த கிரைய ஆவணத்தில் மேற்கே ராஜகோபால் வீடும், பொது சுவரும் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி சந்திரசேகரிடம் இருந்து கிரையம் வாங்கி பொது

சுவரையும் அனுபவம் செய்து வருவதை நான் இடையூறு செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. நான் சொத்தை கிரையம் முடித்து கொடுத்துவிட்டு வாதி சொத்தை அபகரிக்கவேண்டி இடையூறு செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. தாவா இடத்தை எனக்கும், வாதிக்கும் பிரச்சனை எழுந்த பிறகு சர்வேயரைக் கொண்டு இடம் அளக்கப்பட்டது என்றால் அதுகுறித்து எனக்கு நினைவில்லை. சர்வேயர் நிலத்தை அளந்து வாதி இடத்தல் நான் இடையூறு செய்யக்கூடாது என தெளிவுபட தெரிவித்துவிட்டு சென்றால் என்றால் சரியல்ல. வாதியின் உரிமை உள்ள சொத்தில் நான் இடையூறு செய்வது தவறு என்றாலும், வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்க வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.04.01 17:37:25 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.